தேர்தல் நடத்தும் அதிகாரி நியமனம்

ஆர்.கே. நகர் தொகுதியில் சுவர் விளம்பரம் செய்யக் கூடாது: மீறினால் நடவடிக்கை

சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி கார்த்திகேயன் அறிவிப்பு

சென்னை, நவ.25–

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள ஆர்.கே. நகர் தொகுதியில் சுவர் விளம்பரம் செய்ய கூடாது என்றும் அப்படி செய்தால் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்ட தேர்தல் அதிகாரி கார்த்திகேயன் கூறியுள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர், ஆணையாளர் தா.கார்த்திகேயன் தலைமையில் ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம் 24–ந் தேதி அறிவித்துள்ளபடி, சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் (எண்.11) சட்டமன்ற தொகுதிக்கு வருகின்ற 21.12.2017 அன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. அறிவிப்பினை தொடர்ந்து தேர்தல் நன்னடத்தை விதிகள் உடனடியாக மேற்கண்ட சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் சில இனங்களில் மாவட்டம் முழுமைக்கும் அமலுக்கு வருகிறது.

தேர்தல் நடத்தும் அதிகாரி

டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலுக்கு தேர்தல் நடத்தும் அலுவலராக ஆதிதிராவிடர் நலத்துறை இணை இயக்குனர் கே.வேலுச்சாமியும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களாக தண்டையார்பேட்டை வட்டாட்சியர் எஸ்.முருகேசன் மற்றும் தண்டையார்பேட்டை சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் ஆர். சுப்ரமணியன் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாக்காளர் பதிவு அலுவலராக பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டல அலுவலர் கே.பி.விஜயகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகம் தண்டையார் பேட்டையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகத்தில் செயல்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சுவர் விளம்பரம் கூடாது

இந்த தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் கட்டிடங்களில் அரசியல் கட்சியினரோ அல்லது பொதுமக்களோ சுவர் விளம்பரங்கள் செய்யக்கூடாது எனவும், சுவரொட்டிகள் ஏதும் ஒட்டவேண்டாம் எனவும், அவ்வாறு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை உடனடியாக அகற்றுமாறும் கோரப்படுகிறது. அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டுள்ள விளம்பரங்களை சம்பந்தப்பட்ட நபர்கள் அகற்றவில்லையெனில், அவை பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களால் அகற்றப்படும். விதிமீறல் மேற்கொண்ட நபர்கள் மீது இந்திய தண்டனை சட்டத்தின்படி குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளுக்கு உட்பட்டு, இந்த தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்திட ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மாவட்ட கலெக்டர் அன்புச்செல்வன், சென்னை மாநகர காவல்துறை கூடுதல் ஆணையாளர் ஜெயராம், துணை ஆணையாளர் (வருவாய்) ஆர்.லலிதா, துணை ஆணையாளர் (சுகாதாரம்) எம். விஜயலட்சுமி, துணை ஆணையாளர் (பணிகள்) எம்.கோவிந்த ராவ், துணை ஆணையாளர் (கல்வி) மகேஸ்வரி ரவிக்குமார், மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர்.சுபோத்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எஸ்.கோபால சுந்தரராஜ், வருவாய் அலுவலர் (தேர்தல்) முத்துகுமாரசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்.கே.நகர் தொகுதியில் அண்ணா.தி.மு.க. வெற்றி பெறுவது உறுதி: அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் பேட்டி

கரூர்,நவ.25–

ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் அண்ணா.தி.மு.க. வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டதாக போக்குவரத்து துறை அமைச்சர் எம். ஆர்.விஜயபாஸ்கர் கூறினார்.

கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து குறைதீர்க்கும் மனுக்கள் பெறும் முகாம் இன்று காலை நடைபெற்றது. நன்னியூரில் நடந்த முகாமில் போக்குவரத்து துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் பங்கேற்று பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெற்றார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

அ.தி.மு.க.வில் பிரிந்த தலைவர்கள் ஒன்றிணைந்தார்கள். பின்னர் அவர்கள் ஒன்று சேர்ந்து இழந்த இரட்டை இலை சின்னத்தை மீட்டுள்ளார்கள். எனவே ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது.

இந்தியாவில் இழந்த சின்னத்தை இருமுறை மீட்ட ஒரே கட்சி அ.தி.மு.க. மட்டுமே. எம்.ஜி.ஆருக்கு பின்னால் அ.தி.மு.க. இருக்காது என்றார்கள். ஆனால் மறைந்த முதல்வர் ஜெயலலிதா இயக்கத்தை வளர்த்து இந்தியாவில் 3வது பெரிய இயக்கமாக மாற்றிக் காட்டினார். அதேபோன்று இன்னமும் எதிர் காலத்தில் அ.தி.மு.க. வளரும். அ.தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாது. மீண்டும் அ.தி.மு.க.வே தமிழகத்தில் ஆட்சியை பிடிக்கும். எதிர் கட்சிகளின் கனவு பலிக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் சமூகம், விழுப்புரம்

அ.தி.மு.அ4./534/2017

விக்னேஷ்,த/பெ.உலகநாதன், அங்காளம்மன் கோவில் தெரு, அய்யூர் அகரம் கிராமம், விக்ரிவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். -மனுதாரர்

பொது அறிவிப்பு

மனுதாரர் விக்னேஷ் நான் (த/பெ. உலகநாதன்) கடந்த 17-08-1999-தேதியன்று விக்கிரவாண்டி வட்டம், அய்யூர் அகரம் கிராமத்தில் பிறந்ததை கவனக் குறைவாக உரியகாலத்தில் பதிவு செய்ய தவறி விட்டேன். தற்போது என்னுடைய பிறப்பு சான்று தேவை ப்படுவதால் பிறப்பு சான்றுவேண்டி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15(பதினைந்து) தினத்திற்குள் இந்நீதிமன்றத்தில் எழுத்து மூலமோ, நேரிலோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம். தவறினால் இம்மனுவில் ஏதும் ஆட்சேபனை இல்லையென ஒரு தலைப்பட்சமாக ஏற்கப்பட்டு உத்தரவாகிவிடும் என்பதை இதன்மூலம் அறியவும்.

விக்னேஷ்,
மனுதாரர்
த/பெ.உலகநாதன்,
25-11-2017 அய்யூர் அகரம்.

HON'BLE IX SMALL CAUSES COURT, CHENNAI AT CHENNAI
R.A.No. 192 of 2017 against R.C.O.P.No. 1551 of 2006 (on the file of XIV Small Causes Judge, Chennai)

Mr.Jothi, S/o.Dakhnamurthy, ... Appellant/Petitioner
Versus
Tmt.Malliga, W/o.Rajavelu, ... Respondent/Respondent

To
Tmt.Malliga,
W/o.Rajavelu,
No.13/ 15, Krishnappa Gramani,
Garden 2nd Street,
Rettakuzhi Street,
Chennai-600 021.

Please take notice the Appellant/petitioner filed the above R.C.A.No.192 of 2017 to allow this appeal and direct the respondent to quit and deliver the vacant possession of the appeal schedule property. This Hon'ble Court was pleased to order paper publication and returnable on 04.12.2017.

Please further take notice if you fail to appear on 04.12.2017 of 10.30 a.m. this matter will be decided on merits.

G.KRISHNAMURTHY,
M.RAJENDIRAN
Counsel for Appellant/ Petitioner.

IN THE COURT OF XVII ASST CITY CIVIL JUDGE AT CHENNAI
O.S.No. 2852 Of 2016
[Under Order XXXVII Rule 1 of C.P.C.]

CANARA BANK,
Rep. by its Senior Manager,
Kotturpuram Branch ... Plaintiff
-vs-
Mr.A.Karthik and Another ... Defendants

To:
1.A.Karthik (D1)
S/o.Arasaiah, No.312,
P-Block, Chitra Nagar,
Kotturpuram, Chennai - 600 085.
2 Arasaiah, (D2)
S/o.K.Kandasamy, No.312,
P-Block, Chitra Nagar,
Kotturpuram, Chennai - 600 85.

The above suit filed by the plaintiff above named against you for recovery of sum of Rs.4,30,757.60paise together with further interest and costs stands posted to 15/12/2017, for your appearance. Take notice to appear before the Hon'ble XVII Asst City Civil Judge at Chennai on 15/12/2017, at 10:30 A.M. or so soon thereafter, and say objection if any, failing which the above suit will be heard and decided exparte.

O.R.MAHESVAREN
Counsel for Plaintiff

திருவொற்றியூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
I.A.No. 897/17
IN
O.S.No.1504/2017

ஜெயச்சந்திரன் ..மனுதாரர்/வாதி
எதிராக
1. C.பத்மாவதி, W/o.சக்கரபாணி,
2.V.அமிர்தவள்ளி, D/o. சக்கரபாணி,
3.S.உமாமகேஸ்வரி D/o. சக்கரபாணி,
4.C. சீனிவாசன், S/o. சக்கரபாணி,
5.C. சரவணன் S/o. சக்கரபாணி,
மேற்படிபர்களின்சிப்பிடகவரி, 715, திருவொற்றியூர் ஹைரோடு, திருவொற்றியூர், சென்னை – 19.
...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

மேற்படி வழக்கில் மனுதாரர்/ வாதி ஆஜராகததால் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டு கோப்பிலெடுக்கமனு கொடுக்கப்பட்டு மனு நம்பராகி I.A.No. 897/17, மேற்படி நம்பரில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் நேரில் ஆஜராக கோர்ட் மூலம் பலமுறை அறிவிப்பு அனுப்பி சர்வ ஆகாததால்/ தமிழ்நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு வருகின்ற 16.12.2017 அன்று எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மேற்படி கோர்ட்டில் காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகவும், எதிர்உரைக்கும் வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே மேற்படி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் அன்றைய தினம் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தனது கட்சியை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

K. இராதாகிருஷ்ணன்
மனுதாரர்/ வாதி வழக்கறிஞர்

ஸ்ரீராம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: அலுவலக எண். 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை–600 001.
தலைமை அலுவலகம்: லெவல் 3,வாக்ஹார்ட் டவர்ஸ், கிழக்கு விங், C–2 பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கிழக்கு) மும்பை–400 051.
தொலைபேசி: 022 4241 0400, 022 4060 3100 இணையதளம்: www.shriramhousing.in

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு

ஸ்ரீராம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (SHFL) கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (மேற்சொன்ன சட்டம்), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் (மேற்சொன்ன விதிகள்), 3வது விதிமுறைக்கு ஏற்ப கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு மேற்சொன்ன கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்தக் கோரி கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி உள்ளார்.

கடன்தாரர் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள ஸ்ரீராம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிகளின் 9வது விதிமுறைக்கு இணங்கவும், **இன்றைய தினம் நவம்பர் 2017** அன்று அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

வ. எண்	கடன்தாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி நிலுவைத் தொகை	அடையாள சுவாதீன தேதி	சொத்தின் விவரம்
1	1. திரு. A. முருகன் 2. திருமதி. M. துளசி எண். 15, 2வது தெரு, ரங்கநாதபுரம், தாம்பரம், சென்னை – 600 045. சொத்து முகவரி மனை எண். 124ஏ, கதவு எண். 15/16, 2வது தெரு, ரங்கநாதபுரம், தாம்பரம், சென்னை – 600 045. கடன் கணக்கு எண்: SLPHCHNN0000162	19.7.2017 அன்று கடன் கணக்கு எண் SLPHCHNN0000162ன் கீழ் ரூ.18,69,404/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து அறுபத்தொன்பது ஆயிரத்து நானூற்று நான்கு மட்டும்) மற்றும் ஒப்பந்தப்படியான மேலும் வட்டி மேற்சொன்ன அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் அறிவிப்பு தேதி : 24.07.2017	22.11.2017	ஷெட்யூல் 'ஏ' வங்கியில் அடைமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் விவரம் சென்னை 600 045, மேற்கு தாம்பரம் ரங்கநாதபுரம், 2வது தெரு, எண் 106, பிளாட் எண் 124A, என்ற எண்ணில் உள்ள அனைத்து பகுதி மற்றும் மொத்த நிலம் மற்றும் கட்டிடம் நிலம் அளவு 1106 சதுரஅடி, இதில் கிராம நத்தம் சர்வே எண் 307/1, மற்றும் 307/2 ஆகும். இது தாம்பரம் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. இதன் எல்லைகள்: வடக்கில்: 2வது தெரு, தெற்கில்: திரு. சிவாவிற்கு சொந்தமான சொத்து. கிழக்கில்: திரு. ரவிக்கு சொந்தமான சொத்து, மேற்கில் திருமதி. ராணியம்மாளுக்கு சொந்தமான சொத்து. மொத்த விஸ்திரணம் அளவு 1106 சதுரடி. இது தெற்கு சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது மற்றும் தாம்பரம் சார் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது ஆகும்.
2	திரு. சார்லஸ் வெர்பினா மில்டன் திருமதி. மில்டன் புஷ்பலதா மனை எண். 19420, 4வது தெரு, பாலாஜி நகர், விஜயநகரம், சென்னை – 600 073. சொத்து முகவரி கதவு எண். 13, மனை எண். 5 8வது குறுக்குத் தெரு, தண்டீஸ்வரர் நகர், வேளச்சேரி, சென்னை – 600 042 அலுவலக முகவரி பிளாட் எண். 5, 11/பி, சாய் அருணாச்சலம், 100 அடி தரமணி சாலை, ராமகிரி விரிவு, வேளச்சரி, சென்னை – 600 042. கடன் கணக்கு எண்கள்: SHLHCHNI0000740 SLPHCHNI0000911 SLPHCHNI0000992	19.7.2017 அன்று கடன் கணக்கு எண் SHLHCHNI0000740ன் கீழ் ரூ. 97,66,862/- (ரூபாய் தொன்னூற்றியேழு லட்சத்து அறுபத்தாறாயிரத்து எண்ணூற்று அறுபத்து இரண்டு மட்டும்) மற்றும் கடன் கணக்கு எண் SLPHCHNI0000911ன் கீழ் ரூ. 21,76,520/- (ரூபாய் இருபத்தியோரு லட்சத்து எழுபத்தாறு ஆயிரத்து ஐநூற்று இருபது மட்டும்) கடன் கணக்கு எண் SLPHCHNI0000992ன் கீழ் ரூ. 27,89,172/- (ரூபாய் இருபத்தியேழு லட்சத்து எண்பத்தொன்பது ஆயிரத்து நூற்று எழுபத்திரெண்டு மட்டும்) ஒப்பந்தப்படியான மேலும் வட்டி மேற்சொன்ன அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் அறிவிப்பு தேதி : 21.07.2017	22.11.2017	ஷெட்யூல் 'ஏ' வங்கியில் அடைமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் விவரம் சென்னை – 600 042, வேளச்சேரி, தண்டீஸ்வரர் நகர், 8வது குறுக்கு தெரு, மனை எண். 5, கதவு எண். 13–ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். 2760 சதுர அடி நிலத்தில் 1800 சதுர அடி கட்டிடத்தையும் உள்ளடக்கி உள்ளது. சர்வே எண். 209/1 மற்றும் 209/2, பட்டா எண். 1923, புதிய பட்டா எண். 209/1பி, டவுன் சர்வே நிலப் பதிவு சி.ஏ. எண்.34/205, டி.எஸ். எண். 9, பிளாக் எண். 68. இந்த சொத்தானது வேளச்சேரி கிராமம், மாம்பலம் கிண்டி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. சொத்தின் எல்லைகள் : வடக்கு : 50 அடி சாலை தெற்கு : மனை எண். 6 கிழக்கு : மனை எண். 4 மேற்கு : 212–ல் காலி மனை விஸ்தீரணம் கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 46 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 46 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 60 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 60 அடி மொத்த விஸ்தீரணம் 2760 சதுர அடி நிலம் மற்றும் 1800 சதுர அடி கட்டிடத்தையும் உள்ளடக்கி உள்ளது. இந்த சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வேளச்சேரி சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்டது.
3	1. திருமதி அமலி டோரதி 2. திரு. மசாரில்லோ திவ்யா J. எண். 17, மைஸ்டிக் காலனி, மாதவரம் நெடுஞ்சாலை, மாதவரம், சென்னை – 600 060 அலுவலக முகவரி காவ்யாஸ் டிரேடிங் எண். 17, மைஸ்டிக் காலனி, மாதவரம் நெடுஞ்சாலை, மாதவரம், சென்னை – 600 060 கடன் கணக்கு எண்: SLPHCHNN0000127	19.7.2017 அன்று கடன் கணக்கு எண் SLPHCHNN0000127ன் கீழ் ரூ. 44,12,543/- (ரூபாய் நாற்பத்து நான்கு லட்சத்து பன்னிரெண்டாயிரத்து ஐநூற்று நாற்பத்து மூன்று மட்டும்) மற்றும் ஒப்பந்தப்படியான மேலும் வட்டி மேற்சொன்ன அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் அறிவிப்பு தேதி : 24.07.2017	22.11.2017	ஷெட்யூல் 'ஏ' வங்கியில் அடைமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் விவரம் பிளாட் எண் G1, மொத்த பரப்பு 541 (பொது ஏரியா சேர்த்து) G2 மொத்த பரப்பு 734 (பொது ஏரியா சேர்த்து) F1 மொத்த பரப்பு 927 (பொது ஏரியா சேர்த்து) மற்றும் S1 மொத்த பரப்பு 953 (பொது ஏரியா சேர்த்து) இதன் முகவரி பழைய எண் 17–K, துர்கா ஆனந்த அபார்ட்மெண்ட்ஸ் மற்றும் புதிய எண் 18, மைஸ்டிக் காலனி, மாதாவரம், சென்னை 600 060. இத்துடன் 50% பிரிவுபடாத நில பங்கு அதாவது 1694.25 சதுர அடியாக மொத்த நில அளவான 3388.50 சதுர அடியில், இது சர்வே எண் 1083/1A1A1B மற்றும் மாதாவரம் டவுன் சர்வே பீல்ட் பதிவு டி.எஸ். எண் 38. இதன் பிளாக் எண் 60, வார்டு – சி, மாதாவரம் கிராமம், மாதாவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், நிலம் மற்றும் கட்டிடம் எல்லைகள்: வடக்கில் : 12 அடி அகல சாலை மற்றும் சார்லஸ் கிளிபோடுக்கு சொந்தமான சொத்து, தெற்கில்: ஜாரிஷ் தெரசா கிளிபோர்டுக்கு சொந்தமான சொத்து, கிழக்கில்: திருமதி சரஸ்வதி அம்மாளுக்கு சொந்தமான சொத்து, மேற்கில் : 12 அடி சாலை மற்றும் திருமதி லீலா அம்மாள் ஜானுக்கு சொந்தமான சொத்து விஸ்தீரணம் கிழக்கு முதல் மேற்கு வரை, வடக்கு பக்கம்: 67 அடி மற்றும் 6 இஞ்ச் கிழக்கு முதல் மேற்கு வரை, தெற்கு பக்கம்: 58 அடி வடக்கு முதல் தெற்கு வரை கிழக்கு பக்கம் : 53 அடி வடக்கு முதல் தெற்கு வரை, மேற்கு பக்கம்: 55 அடி சென்னை வடக்கு மாவட்ட பதிவுக்குள் மற்றும் மாதாவரம் சார் பதிவாளர் மாவட்டத்துக்குட்பட்டது.
4	1. திரு. குலசேகரன் 2. திருமதி. திலகா 142/143, ரஞ்சனி நகர், கிளாம்பாக்கம், திருவள்ளூர் – 602 025 கடன் கணக்கு எண்: SLPHCHNI0000375	19.7.2017 அன்று கடன் கணக்கு எண் SLPHCHNI0000375ன் கீழ் ரூ.10,31,659/- (ரூபாய் பத்து லட்சத்து முப்பத்தோராயிரத்து அறுநூற்று ஐம்பத்தொன்பது மட்டும்) மற்றும் ஒப்பந்தப்படியான மேலும் வட்டி மேற்சொன்ன அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் அறிவிப்பு தேதி : 24.07.2017	22.11.2017	ஷெட்யூல் 'ஏ' வங்கியில் அடைமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் விவரம் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் தாலுக்கா, கிளாம்பாக்கம் கிராமம், ரஞ்சனி நகர், மனை எண். 142 மற்றும் 143–ல் உள்ள நிலம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சர்வே எண். 232/3ஏ (பகுதி), பட்டா எண். 953, புதிய பட்டாப்படி எஸ்.எண். 232/3ஏ11, கிளாம்பாக்கம் பஞ்சாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட கடித எண். 1/2006. விஸ்தீரணம் 2400 சதுர அடியுடன் கட்டிடம் மற்றும் இதர வசதிகளையும் உள்ளடக்கி உள்ளது. நிலத்தின் எல்லைகள் : வடக்கு : மனை எண்கள். 158 & 159 தெற்கு : 23 அடி சாலை கிழக்கு : மனை எண். 141 மேற்கு : மனை எண். 144 விஸ்தீரணம் கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 48 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 48 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 50 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 50 அடி இந்த சொத்தானது காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் சார் பதிவு மாவட்ட எல்லைக் குட்பட்டது.

ஸ்ரீராம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் சட்டப்படி மேற்குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார் என்பதை பொதுமக்களுக்கு எச்சரிக்கை தெரிவிக்கும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. இந்த அறிவிப்பு பெற்ற பிறகு கடன்தாரர் அல்லது இதர நபர் ஸ்ரீராம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் முன்அனுமதியின்றி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்பனை செய்தல், லீசுக்கு விடுதல் அல்லது பிரித்துக் கொள்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது.

ஒப்பம்/–
இடம்: சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி: 22.11.2017 ஸ்ரீராம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

லோட்டே இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 4/111, மவுண்ட் பூந்தமல்லி ரோடு, மணப்பாக்கம், சென்னை–600 089. தொலைபேசி: 044–4545 8888; Fax:044-4545 8800; email: compsecy@lotteindia.com
Corporate Identity Number: U15419TN1954PLC001987; website: www.lotteindia.com

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு தனித்தனியே அனுப்பப்பட்டுள்ள வருடாந்திர பொதுக் கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் அறுபத்திரெண்டாவது வருடாந்திர பொதுக்கூட்டம் திங்கட்கிழமை, 18 டிசம்பர் 2017 அன்று காலை 10.30 மணிக்கு எம்.ஏ. சிதம்பரம் ஹால், சதர்ன் இந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரி, எஸ்பிளனேட், சென்னை–600 108ல் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேற்படி அலுவல்கள், கம்பெனிகள் சட்டம் 2013, விதி 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 மற்றும் அதன் கீழுள்ள பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மின்னணு வாக்குப்பதிவின் மூலமாகவும் நிறைவேற்றலாம். சிடிஎஸ்எல் மூலமாக அனைத்து உறுப்பினர்களும் மின்னணு மூலம் வாக்குப்பதிவு அளிக்கும் வசதியை கம்பெனி ஏற்படுத்தி உள்ளது. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக மேற்கொண்டு விவரங்களுக்கு வருடாந்திர பொதுக்கூட்ட அழைப்பு அறிவிப்பில் இணைக்கப்பட்டுள்ள குறிப்புகளை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 62வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.lotteindia.comல் உள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு 15.12.2017 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி 17.12.2017 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது (இரண்டு நாட்களும் உள்பட). பொதுக்கூட்டத்தில் அல்லது மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஓட்டளிப்பதற்கு தகுதி உள்ள பங்குதாரர்களை தீர்மானிக்க கட்ஆப் தேதியாக 11.12.2017ஐ கம்பெனி நிர்ணயித்துள்ளது.

கம்பெனியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் 12.12.2017 முதல் 18.12.2017 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

மின்னணு மூலமாக வாக்குப்பதிவு செய்ய விரும்பும் உறுப்பினர்கள் மேற்சொன்ன தேதிக்குள் வாக்குகளை பதிவு செய்ய வேண்டும். 17.12.2017 அன்று மாலை 5.00 மணிக்கு பிறகு மின்னணு மூலம் பதிவாகும் வாக்குகள் செல்லாதவையாக கருதப்படும் மற்றும் எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

வருடாந்திர அறிக்கைகள் அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை பெற்ற பங்குதாரர்கள் மற்றும் கட் ஆப் தேதியன்று உறுப்பினர் பதிவேட்டில் உள்ளவர்கள் helpdesk.evoting@cdslindia.comக்கு கோரிக்கை அனுப்பி அல்லது கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சென்னை (எங்களின் பதிவாளர்கள் மற்றும் பரிமாற்ற முகவர்கள்) அவர்களை – 044 28460390/394, email: investor@cameoindia.com தொடர்பு கொண்டு லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொண்டு மின்னணு மூலமாக வாக்களிக்கலாம்.

மின்னணு வாக்குப்பதிவு காலத்தில் மின்னணு மூலமாக வாக்குகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் ஓட்டு படிவம் மூலமாக வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கலாம். மின்னணு மூலமாக வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஓட்டு படிவம் மூலமாக வாக்களிக்க முடியாது.

மின்னணு வாக்குப்பதிவு முறைகள் நேர்மையாகவும் சிறந்த முறையிலும் நடைபெற திரு. கே. மோகன், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், சென்னை அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது. வருடாந்திர பொதுக்கூட்டம் முட